Crl.Misc/ 39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
VALANGAIMAN

Calendar
Miscellaneous **Case No. CC.73/2025**
Preliminary Register

Deposition of **PW- 5 LW -5**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | சுரேஷ் | Husband Name | : | ராமமூர்த்தி |
| Village | : | ஆலங்குடி | Taluk | : | வலங்கைமான் |
| Calling | : | விவசாயி | Age | : | 35 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 06th day of April 2026. Accused present.

சாட்சி வலங்கைமான் காவல் நிலையம் தலைமைக்காவலர் திரு.R.கல்யாணசுந்தரம் என்பவரால் அடையாளம் காட்டப்பட்டுள்ளார். எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலை.

**முதல் விசாரணை-**

நான் மேற்படி முகவரியில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். 2017ம் வருடம் தேதி மாதம் ஞாபகமில்லை. காலை 09.00 மணியளவில் நான் ஆலங்குடி அருகே இருக்கும் போது போலீசார் வந்தார்கள். எதற்கு வந்தார்கள் என்று எனக்கு தெரியாது. இவ்வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. நான் எந்த பேப்பரிலும் கையொப்பம் செய்யவில்லை. தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். அதிலுள்ள விபரங்கள் எனக்கு தெரியாது. **மேற்படி பார்வை மகசரில் உள்ள முதலாவது**

**கையொப்பம் அ.த.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி அரசு தரப்பு வழக்கிற்கு அனுசரணையாக சாட்சியமளிக்காததால் அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதன் பேரில் அனுமதி அளிக்கப்பட்டது.**

கடந்த 12.10.2017ம் தேதி காலை 09.00 மணியளவில் நான் சம்பவயிடத்தில் இருந்தேன் என்றால் அங்கு வந்த போலீசார் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்றாலும் நான் சாட்சியாக கையொப்பம் செய்தேன் என்றாலும் சரியல்ல. நான் எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை - இல்லை.**

**மறுவிசாரணை - இல்லை**

என்னால் சொல்லப்பட்டு என்னுடைய மேற்பார்வையில் என்னுடைய ஆணையின் கீழ் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு விளக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

JESU BALAN

Digitally signed by JESU BALAN
Date: 2026.04.06 14:40:02 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,

வலங்கைமான்.

Crl.Misc/ 39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE VALANGAIMAN

Calendar

Miscellaneous **Case No. CC.73/2025**

Preliminary Register

Deposition of **PW-4 LW-4**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | கண்ணன் | Husband Name | : | கிருஷ்ணன் |
| Village | : | ஆலங்குடி | Taluk | : | வலங்கைமான் |
| Calling | : | விவசாயி | Age | : | 58 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 06th day of April 2026. Accused present.

சாட்சி வலங்கைமான் காவல் நிலையம் தலைமைக்காவலர் திரு.R.கல்யாணசுந்தரம் என்பவரால் அடையாளம் காட்டப்பட்டுள்ளார். எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலை.

**முதல் விசாரணை-**

நான் மேற்படி முகவரியில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியைத் தெரியும். அ.சா.1 எனது மாமியார் ஆவார். அ.சா.2 எனது மனைவி ஆவார். அ.சா.3 எனது கொழுந்தியார் ஆவார். கடந்த 05.10.2017ம் தேதி காலை 07.00 மணியளவில் ஆலங்குடி மாரியம்மன் கோவில் தெருவில் இருந்து நான் கிளம்பி நீடாமங்கலம் வந்துவிட்டேன். 07.30 மணியளவில் எங்கள் வீட்டு அருகில் உள்ள ஜெயலெட்சுமி என்பவர் எனக்கு போன் செய்து எங்கள் வீட்டில் சண்டை நடப்பதாக என்னிடம் கூறினார். நான் உடனே கிளம்பி காலை 07.45 மணியளவில் வீட்டிற்கு

வந்து விட்டேன். வந்து பார்க்கும் போது எனது மனைவியை அடித்ததில் வாயில் இரத்தமாகவும் தொண்டை பகுதியில் வீக்கமாகவும் இருந்தது. நான் எல்லாரையும் அழைத்துக்கொண்டு ஆலங்குடி அரசு மருத்துவமனைக்கு சென்றேன். மருத்துவமனை 09.00மணிக்கு திறப்பதாக கூறியதால் நானும் அ.சா.1, அ.சா.2, அ.சா.3 ஆகியோருடன் வலங்கைமான் காவல் நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்தோம். போலீசார் என்னை விசாரித்து மருத்துவமனைக்கு அழைத்து செல்ல சொன்னார்கள். அழைத்து சென்றேன். 2 நாட்கள் வலங்கைமான் மருத்துவமனையிலும் திருவாரூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் 3 நாட்கள் சிகிச்சை எடுத்துக்கொண்டேன். அ.சா.1 கொடுத்த புகார் சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை -**

நான் தஞ்சாவூர் மாவட்டம் பேராவூரணி நாடாகாடு தெருவில் வசித்து வந்தேன் என்றால் சரிதான். நான் தற்போது ஆலங்குடியில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரியின் குடும்பத்திற்கும் எங்களுக்கும் இடம் பிரச்சனை சம்மந்தமாக முன்விரோதம் இருந்து வந்தது என்றால் சரிதான். எங்கள் வீடும் ஆஜர் எதிரியின் வீடும் பக்கத்து வீடு என்றால் சரிதான். சம்பவத்தை பற்றி எனக்கு நேரிடையாக தெரியாது என்றால் சரிதான். நான் தான் அ.சா.1 ஐ காவல் நிலையம் அழைத்து சென்று புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். புகாரினை நான் தான் எழுதி கொடுத்தேன் என்றால் சரிதான். நான் போலீசாரிடம் கொடுத்த வாக்குமூலத்திற்கும் தற்போது நீதிமன்றத்தில் கொடுக்கும் சாட்சியித்திற்கும் முரண்பாடு உள்ளது என்றால் சரியல்ல. அ.சா.1 எனது மாமியார் என்பதால் அவர் கொடுத்த புகாருக்கு ஆதரவாகவும் எதிரி குடும்பத்தின் மீதுள்ள முன் விரோதம் காரணமாகவும், எதிரிக்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் கூறியுள்ளது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும், எதிரியின் குடும்பத்தின் மீதுள்ள முன்விரோதத்தின் காரணமாகவும் அவர்களை பழி வாங்க என்ற நோக்கத்துடன் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை**

என்னால் சொல்லப்பட்டு என்னுடைய மேற்பார்வையில் என்னுடைய ஆணையின் கீழ் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு விளக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

JESU BALAN
Digitally signed by JESU BALAN
Date: 2026.04.06 14:40:12 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,
வலங்கைமான்.

Crl.Misc/ 39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE

VALANGAIMAN

Calendar

Miscellaneous **Case No. CC.73/2025**

Preliminary Register

Deposition of **PW-3 LW-3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | செண்பகம் | Husband Name | : | பூபாலன் |
| Village | : | ஆலங்குடி | Taluk | : | வலங்கைமான் |
| Calling | : | இல்லத்தரசி | Age | : | 33 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 06th day of April 2026. Accused present.

சாட்சி வலங்கைமான் காவல் நிலையம் தலைமைக்காவலர் திரு.R.கல்யாணசுந்தரம் என்பவரால் அடையாளம் காட்டப்பட்டுள்ளார். எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலை.

**முதல் விசாரணை-**

நான் மேற்படி முகவரியில் வசித்து இல்லத்தரசியாக இருந்து வருகிறேன். ஆஜர் எதிரியைத் தெரியும். அ.சா.1 எனது அம்மா ஆவார். அ.சா.2 எனது அக்கா ஆவார். கடந்த 05.10.2017ம் தேதி காலை 07.00 மணியளவில் ஆலங்குடி மாரியம்மன் கோவில் தெருவில் எனது வீட்டில் நான் இருந்த போது எதிரி வீட்டு கன்றுக்குட்டி எங்கள் வீட்டிற்கு வந்துவிட்டது. வீட்டின் உள்ளே விளையாடி கொண்டிருந்த எனது அக்கா குழந்தைகள் பயந்து விட்டார்கள். அ.சா.1 கன்றுக்குட்டியை அடித்து விரட்டுங்கள் என்று கூறினார். நாங்கள் கன்றுக்குட்டியை அடிக்கவில்லை சும்மா தான் விரட்டி

விட்டோம். எதிரி பிரபு கன்றுக்குட்டியை அடித்து விடுவீங்களா என்று கூறி அசிங்கமான வார்த்தைகளால் திட்டி கையால் அ.சா.2ஐ தாடைக்கு கீழ் ஓங்கி குத்திவிட்டார். அ.சா.2க்கு இரத்தம் கட்டிவிட்டது. அடி தாங்க முடியாமல் எனது அக்கா கத்தினார். அ.சா.1 ஏன் மகளை போட்டு அடிக்கிறாய் என்று எதிரியிடம் கேட்டதற்கு பிரபு எனது அம்மாவின் கண்ணத்தில் ஓங்கி அடித்துவிட்டார். நான் எதிரியிடம் ஆம்பளை இல்லாத வீட்டில் இப்படி யாராது செய்வார்களா என்று கேட்டவுடன் பிரபு என்னை அடித்து வாய்க்காலில் தள்ளவிட்டார். கல்யாணி தென்னை மட்டையை எடுத்து அ.சா.2ஐ அடித்தார். பாபுவும் கல்யாணியும் என் அக்காவை சேர்ந்து அடித்ததில் அவரது ஜாக்கெட் கிழிந்துவிட்டது. பிரபு என்பவர் எனது அக்கா கைக்குழந்தையுடன் ரோட்டிற்கு ஓடி வந்தவரை ஓங்கி உதைத்ததில் எனது அக்கா தலைக்குப்புற கீழே விழுந்துவிட்டார். காயம்பட்ட நாங்கள் வலங்கைமான் அரசு மருத்துவமனைக்கு சென்றோம். என் அக்கா கணவர் கண்ணன் ஊரிலிருந்து வந்தவுடன் எனது அம்மாவும் அவரும் சென்று வலங்கமைான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தனர். அந்த புகார் சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை -**

ஆஜர் எதிரியின் குடும்பத்திற்கும் எங்களுக்கும் இடையே முன்விரோதம் இருந்தது என்றால் சரிதான். எங்கள் வீடும் ஆஜர் எதிரியின் வீடும் பக்கத்து வீடு என்றால் சரிதான். எனது வீட்டிற்கும் ஆலங்குடி உள்ள அரசு மருத்துவமனைக்கும் இடையே எவ்வளவு தூரம் என்றால் சுமார் 200மீட்டர் தூரம் இருக்கும். நான் போலீசாரிடம் கொடுத்த வாக்குமூலத்திற்கும் தற்போது நீதிமன்றத்தில் கொடுக்கும் சாட்சியித்திற்கும் முரண்பாடு உள்ளது என்றால் சரியல்ல. அ.சா.1 எனது அம்மா என்பதால் அவர் கொடுத்த புகாருக்கு ஆதரவாகவும் எதிரி குடும்பத்தின் மீதுள்ள முன் விரோதம் காரணமாகவும், எதிரிக்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சம்பவம் நடைபெற்றவுடன் அருகில் உள்ள ஆலங்குடி அரசு மருத்துவமனைக்கு செல்லாமல் வலங்கமைானில் உள்ள அரசு மருத்துவமனைக்குத்தான் சென்றேன் என்றால் சரிதான். நான் கூறியுள்ளது போல்

சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும், எதிரியின் குடும்பத்தின் மீதுள்ள முன்விரோதத்தின் காரணமாகவும் அவர்களை பழி வாங்க என்ற நோக்கத்துடன் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை**

என்னால் சொல்லப்பட்டு என்னுடைய மேற்பார்வையில் என்னுடைய ஆணையின் கீழ் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு விளக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

JESU BALAN

Digitally signed by JESU BALAN
Date: 2026.04.06 14:40:21 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,

வலங்கைமான்.

Crl.Misc/39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE

VALANGAIMAN

Calendar

Miscellaneous **Case No. CC.73/2025**

Preliminary Register

Deposition of **PW-2 LW-2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | ஜமுனா | Husband Name | : | கண்ணன் |
| Village | : | ஆலங்குடி | Taluk | : | வலங்கைமான் |
| Calling | : | இல்லத்தரசி | Age | : | 39 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 06th day of April 2026. Accused present.

சாட்சி வலங்கைமான் காவல் நிலையம் தலைமைக்காவலர் திரு.R.கல்யாணசுந்தரம் என்பவரால் அடையாளம் காட்டப்பட்டுள்ளார். எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலை.

<u>முதல் விசாரணை-</u>

நான் மேற்படி முகவரியில் வசித்து இல்லத்தரசியாக இருந்து வருகிறேன். ஆஜர் எதிரியைத் தெரியும். அ.சா.1 எனது அம்மா ஆவார். கடந்த 05.10.2017ம் தேதி காலை 07.00 மணியளவில் ஆலங்குடி மாரியம்மன் கோவில் தெருவில் எனது வீட்டில் நான் இருந்த போது எனது இரண்டு குழந்தைகள் வீட்டில் விளையாடி கொண்டிருந்தார்கள். ஆஜர் எதிரி வீட்டிற்கு வந்த கன்னுக்குட்டியை அவிழ்த்துவிட்டவுடன் அந்த கன்னுக்குட்டி எங்கள் வீட்டிற்கு உள்ளே வந்தது. இதனால் எனது பிள்ளைகள் பயந்து கத்தி கொண்டிருந்தார்கள். என்ன என்று நான்

வந்து பார்த்த போது எனது குழந்தைகள் இரண்டும் என்னிடம் கன்னுக்குட்டி வந்துவிட்டது என்றும் அதனால் நாங்கள் பயந்து விட்டோம் என்றும் கூறினார்கள். அ.சா.1 கன்னுக்குட்டியை அடித்து விரட்டுங்கள் என்று கூறினார். நாங்கள் கன்றுக்குட்டியை அடிக்கவில்லை சும்மா தான் விரட்டி விட்டோம். எதிரி பிரபு கன்றுக்குட்டியை அடித்து விடுவீங்களா என்று கூறி அசிங்கமான வார்த்தைகளால் திட்டி கையால் என்னை தாடைக்கு கீழ் ஓங்கி குத்திவிட்டார். எனக்கு இரத்தம் கட்டிவிட்டது. பிரவு வந்து அடிக்கவும் அதன் பிறகு பிரபுவின் அம்மா, தம்பி ஆகியோர்கள் வந்தும் என்னை அடித்தார்கள். நான் கீழே விழுந்தவுடன் கல்யாணி என்னை தென்னை மட்டையால் அடித்தார். பிரபு மற்றும் பாபு என்னை கீழே போட்டு மிதித்தார்கள். எதிரிகள் அடித்ததில் எனக்கு வாயில் இரத்தம் வந்துவிட்டது. அ.சா.1 எனது அம்மா வந்து கேட்டதற்கு அவரை எதிரி கண்ணத்தில் அறைந்துவிட்டார். எனது தங்கை செண்பகத்தை பாபு என்பவர் அடித்து வாய்க்காலில் தள்ளிவிட்டார். எனது சட்டை கிழிந்து விட்டது. செண்பகத்திற்கு துப்பட்டா கிழிந்துவிட்டது. இது சம்மந்தமாக நடவடிக்கை எடுக்க வேண்டி வலங்கைமான் காவல் நிலையத்தில் எனது அம்மா அ.சா.1 புகார் மனு கொடுத்தார். போலீசார் என்னை விசாரணை செய்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை -**

ஆஜர் எதிரியின் குடும்பத்திற்கும் எங்களுக்கும் இடையே முன்விரோதம் இருந்தது என்றால் சரிதான். காவல் நிலையத்தில் புகார் கொடுக்கும் போது நான் அ.சா.1 உடன் சென்றேன் என்றால் சரிதான். எங்கள் வீடும் ஆஜர் எதிரியின் வீடும் பக்கத்து வீடு என்றால் சரிதான். சம்பவம் எவ்வளவு மணி நேரம் நடந்தது என்றால் காலை 07-10 மணிவரை நடந்தது. சம்பவயிடமானது வீடுகள் நெருக்கமாக உள்ள பகுதி என்றால் சரிதான். எனது காயத்திற்கு எந்த மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டேன் என்றால் வலங்கைமான் அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டேன். எனது வீட்டிற்கும் ஆலங்குடி உள்ள அரசு மருத்துவமனைக்கும் இடையே எவ்வளவு தூரம் என்றால் சுமார் 200மீட்டர் தூரம் இருக்கும். நான் போலீசாரிடம் கொடுத்த வாக்குமூலத்திற்கும் தற்போது

நீதிமன்றத்தில் கொடுக்கும் சாட்சயித்திற்கும் முரண்பாடு உள்ளது என்றால் சரியல்ல. அ.சா.1 எனது அம்மா என்பதால் அவர் கொடுத்த புகாருக்கு ஆதரவாகவும் எதிரி குடும்பத்தின் மீதுள்ள முன் விரோதம் காரணமாகவும், எதிரிக்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை**

என்னால் சொல்லப்பட்டு என்னுடைய மேற்பார்வையில் என்னுடைய ஆணையின் கீழ் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு விளக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

JESU BALAN

Digitally signed by JESU BALAN
Date: 2026.04.06 14:40:30 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,

வலங்கைமான்.

Crl.Misc/ 39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
VALANGAIMAN

Calendar
Miscellaneous                Case No. CC.73/2025
Preliminary Register

Deposition of                **PW-1 LW-1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | சந்திரா | Husband Name | : | வேணுகோபால் |
| Village | : | ஆலங்குடி | Taluk | : | வலங்கைமான் |
| Calling | : | விவசாயி | Age | : | 60 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 06th day of April 2026. Accused present.

சாட்சி வலங்கைமான் காவல் நிலையம் தலைமைக்காவலர் திரு.R.கல்யாணசுந்தரம் என்பவரால் அடையாளம் காட்டப்பட்டுள்ளார். எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலை.

<u>**முதல் விசாரணை-**</u>

நான் மேற்படி முகவரியில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியைத் தெரியும். கடந்த 05.10.2017ம் தேதி காலை 07.00 மணியளவில் ஆலங்குடி மாரியம்மன் கோவில் தெருவில் எனது வீட்டில் நான் இருந்த போது என் வீட்டில் இரண்டு பேரப்பிள்ளைகள் உள்ளார்கள். ஆஜர் எதிரி வீட்டிற்கு வந்த கன்னுக்குட்டியை அவிழ்த்துவிட்டவுடன் அந்த கன்னுக்குட்டி எங்கள் வீட்டிற்கு உள்ளே வந்தது. இதனால் எனது பேரப்பிள்ளைகள் பயந்து கத்தி கொண்டிருந்தார்கள். நான் பொதுவாக குழந்தைகள் இருக்கும் இடத்தில் இதுபோல்

கன்னுக்குட்டியை அவிழ்த்துவிட்டுவிட்டீர்கள் என்று சத்தம் போட்டேன். வீட்டிற்குள் வந்த கன்னுக்குட்டியை அடித்து விரட்டுங்கள் என்று என் மகள் ஜமூனாவிடம் நான் கூறினேன். இந்த செய்தியை பிரபு காதில் வாங்கிக்கொண்டு என் வீட்டிற்கு வந்து என் கன்னுக்குட்டியை அடிப்பியா என்று என்னிடம் சண்டை போட்டார். எதிரி பிரபு எனது மகள் ஜமூனாவை போட்டு அடி அடி என்று அடித்தார். பிறகு எதிரியின் தாயார் கல்யாணி பச்சை மட்டையை எடுத்துக்கொண்டு என் மகள் ஜமூனாவை அடித்தார். என் மகள் செண்பகம் ஜமூனாவை ஏன் இப்படி அடிக்கறீர்கள் என்று எதிரியிடம் கேட்டார். செண்பகத்தை பாபு அடித்து வாய்க்காலில் தள்ளிவிட்டார். சண்டையில் ஜமூனாவிற்கு சட்டை கிழிந்து விட்டது. செண்பகத்திற்கு துப்பட்டா கிழிந்துவிட்டது. இது சம்மந்தமாக நடவடிக்கை எடுக்க வேண்டி வலங்கைமான் காவல் நிலையத்தில் புகார் மனு கொடுத்தேன். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதல்ல. போலீசார் என்னை விசாரணை செய்தார்.

**சாட்சி அரசு தரப்பு வழக்கிற்கு பகுதி அனுசரணையாக சாட்சியமளிக்காததால் அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதன் பேரில் அனுமதி அளிக்கப்பட்டது.**

நான் சண்டை நடந்த அன்று புகார் கொடுத்தேன். அந்த புகார் நான் கொடுத்தது தான் என்றால் அந்த புகாரில் 5 நபர்கள் இருந்தால் மட்டுமே அந்த புகார் நான் கொடுத்தது. நான் கொடுத்த புகாரில் பிரபு, பாபு, கல்யாணி, மணிமேகலை மற்றும் பாலையன் ஆகியோர்கள் குறிப்பிட்டு புகார் கொடுத்திருந்தேன். ஆனால் நான் கொடுத்த புகாரில் பிரபு பெயர் மட்டும் தான் உள்ளதா என்றால் இல்லை நான் கொடுக்கவில்லை போலீசார் அதை மாற்றி எழுதி உள்ளார்கள். ஜமூனாவின் ஜாக்கெட்டை 5 நபர்களில் யார் கிழித்தார்கள் என்று எனக்கு தெரியாது. 5 நபர்கள் சேர்ந்து கிழித்ததால் என்னால் உறுதியாக சொல்ல முடியாது. ஜாக்கெட் மற்றும் துப்பட்டாவை காவல் துறையினரிடம் ஒப்படைத்துவிட்டேன். அவர்கள் நீதிமன்றத்திற்கு வந்துவிடும் என்று கூறினார்கள். பிரபு, பாபு, கல்யாணி,மணிமேகலை மற்றும் பாலையன் ஆகிய 5 நபர்களுக்கு எதிராக எனது மருமகன் திருவாரூர் காவல் கண்காணிப்பாளரிடம் புகார் மனு கொடுத்தார். அந்த புகார் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்றால் இதுவரை இல்லை. மேற்படி காவல் கண்காணிப்பாளரிடம்

கொடுக்கப்பட்ட புகார் மனுவுடன் கூடிய மருத்துவ ரசீது **அ.த.சா.ஆ.1** ஆக (எதிரி தரப்பில், புகார் மனு இவ்வழக்கின் புகார்தாரரால் கொடுக்கப்படவில்லை, அஞ்சலக ரசீது காவல் ஆய்வாளருக்கு அனுப்பப்பட்டதாக குறிப்பிடப்பட்டு பின்பு கையால் கண்காணிப்பாளர் என்று எழுதப்பட்டுள்ளது, மேலும் மருத்துவ குறிப்புகள் அனைத்தும் மருத்துவரின் கையொப்பம் இல்லாமல் உள்ளது என்பதால் ஆட்சேபிக்கப்பட்டு ) ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** -

05.10.2017 அன்று காலை 07.00 மணியளவில் சம்பவம் நடந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் புகாரில் 06.10.2017ம் தேதி தான் புகார் கொடுக்கப்பட்டதாக உள்ளது என்றால் சரியல்ல. எனது வீடும் ஆஜர் எதிரி வீடும் பக்கத்து பக்கத்து வீடு என்றால் சரிதான். சம்பவம் நடந்த போது சம்பவயிடத்தில் கூட்டமாக இருந்தது என்றால் சரிதான். எனக்கும் ஆஜர் எதிரிக்கும் இடையே முன்விரோதம் இருந்தது என்றால் சரிதான். சம்பவம் நடந்த நேரத்தில் எனது மருமகன் கண்ணன் எங்கிருந்தார் என்றால் நீடாமங்கலத்தில் இருந்தார். அவரை நான் தான் அலைபேசி மூலம் வரசொன்னேன் என்றால் சரிதான். புகாரினை யார் எழுதினார் என்றால் எனது மருமகன் தான் எழுதினார். எங்கள் தெருவில் அனைவர் வீட்டிலும் ஆடு மாடுகள் வளர்க்கிறார்கள் என்றால் சரிதான். நான் கொடுத்த புகாரில் ஆஜர் எதிரி என்ன என்ன வார்த்தைகளால் திட்டினார் என்று குறிப்பிட்டிருந்தேனா என்றால் குறிப்பிட்டிருந்தேன். நான் சொல்வது போல் எதிரி என்னை திட்டவில்லை என்றாலும், நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் சரியல்ல. என்னால் தற்போது நீதிமன்றத்தில் தாக்கல் செய்த அ.த.சா.ஆ.1 ஆவணமானது தற்போது என்னால் தயார் செய்யப்பட்டு நீதிமன்றத்தில் அனுதாபத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காகவும் எதிரியின் குடும்பத்ினரை பழிவாங்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்திலும், முன்விரோதத்தின் காரணமாக அ.த.சா.ஆ.1 ஆவணத்தை அனுசரித்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை**

என்னால் சொல்லப்பட்டு என்னுடைய மேற்பார்வையில் என்னுடைய ஆணையின் கீழ் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு விளக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

JESU BALAN

Digitally signed by JESU BALAN
Date: 2026.04.06 14:40:42 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,

வலங்கைமான்.